Forward. For all.

# நன்னடத்தைக் கோட்பாடு மற்றும் நன்னெறிகள்



## தலைமை

# நிர்வாக அதிகாரியின் செய்தி

Magna-இன் நன்னடத்தை மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகள், ஒரு நிறுவனமாகவும் தனிநபர்களாகவும் நம்மை வரையறுக்கும் மதிப்புகளைப் பிரதிபலிக்கின்றன. இது நேர்மை, நியாயம் மற்றும் மரியாதை தொடர்பான நமது உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது. நமது கோட்பாடுகள் நாம் சரியான முடிவுகளை எடுக்கவும், மற்றவர்களை மரியாதையுடன் நடத்தவும், ஒவ்வொரு நாளும் நமது வாடிக்கையாளர்கள், கூட்டாளர்கள் மற்றும் சமூகங்களின் நம்பிக்கையைப் பேணவும் நமக்கு உதவுகின்றன.

எங்கள் நன்மதிப்பைப் பாதுகாக்கவும், Magna -வின் தற்போதைய வெற்றிக்கு பங்களிக்கவும், எங்கள் கோட்பாடுகளின் மதிப்புகளை திறனாய்வு செய்யவும், புரிந்து கொள்ளவும், அதன்படி நடக்கவும் நாம் அனைவரும் நேரத்தை ஒதுக்குவது அவசியமாகும். நமது கோட்பாடுகளே நாம் ஒவ்வொரு நாளும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டியாகும்.

நெறிமுறைக்குட்பட்ட நடத்தை அங்கீகரிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படும் ஒரு சூழலை உருவாக்கியுள்ள உங்களைப் போன்ற நமது சிறந்த பணியாளர்களை நினைத்துப் பெருமைப்படுகிறேன். இதுவே 2022 ஆம் ஆண்டு முதல், Ethisphere நிறுவனத்தால் World's Most Ethical Companies®-இல் ஒன்றாக Magna அங்கீகரிக்கப்படுவதற்கு ஒரு காரணமாகும், இந்தக் கௌரவம், சிறப்பான திட்டங்களையும் வணிக நேர்மையை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்பையும் கொண்ட ஒரு சில நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

Magna -க்கு உங்கள் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் நமது நெறிமுறை மதிப்புகளை நிலைநிறுத்துவதற்கான உங்கள் அர்ப்பணிப்பிற்கும் நன்றி. நாம் அனைவரும் இணைந்து, Magna-இன் நெறிமுறைமிக்க கலாச்சாரத்தையும், உலகளாவிய சந்தையில் நமது நிலையையும் வலுப்படுத்த உதவுகிறோம், அத்துடன் நமது செயல்கள் நாம் யார் என்பதை வரையறுக்கும் கொள்கைகளைப் பிரதிபலிப்பதை உறுதிசெய்கிறோம்.

**சுவாமி கோத்தகிரி (Swamy Kotagiri)**
முதன்மை செயல் அதிகாரி



தலைமை

# இணக்க அதிகாரியின் செய்தி

Magna-இல், நேர்மை என்பது வெறும் ஒரு கொள்கை மட்டுமல்ல; அதுவே நாம் வழிநடத்தும் முறையாகும். நமது நன்னடத்தை மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகள் என்பது ஒரு வெறும் ஆவணம் மட்டுமல்ல அதை விட மேலானது; அது ஒவ்வொரு முடிவையும், ஒவ்வொரு ஊடாடலையும் மற்றும் ஒவ்வொரு கூட்டாண்மையையும் வடிவமைக்கும் ஓர் அர்ப்பணிப்பாகும்.

நாம் இயங்கும் உலகம் சிக்கலானது, நாம் எடுக்கும் முடிவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதனால்தான், சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள உங்களுக்கு உதவும் கருவிகளையும் ஆதாரங்களையும் உருவாக்கியுள்ளோம்:

- சரியான பதில் தெளிவாக இல்லாதபோது வழிகாட்டுதலுக்காகப் பிராந்திய இணக்க அதிகாரிகள் மற்றும் MagNET-இல் உள்ள இணக்க ஆதாரங்களைத் தொடர்பு கொள்ளவும்
- அதை வெளிப்படுத்துங்கள்! ஆதாய முரண்பாடுகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பரிசுகளைப் புகாரளிப்பதற்காக வெளிப்படுத்துங்கள்
- நமது கூட்டாளர்கள் நமது மதிப்புகளையும் நெறிமுறைசார் வணிக நடைமுறைகளையும் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்கான நேர்மை சரிபார்ப்பு

இந்த ஆதாரங்கள் ஒரே ஒரு காரணத்திற்காகவே உள்ளன: சரியானதைச் செய்வதற்கு உங்களுக்கு அதிகாரம் அளிக்க. மேலும், சரியானதைச் செய்வது என்றால் உடைத்துப் பேசுவதுதான். நீங்கள் உடைத்துப் பேசும்போது, நமது கலாச்சாரத்தைப் பாதுகாக்கிறீர்கள் மற்றும் நமது நற்பெயரை வலுப்படுத்துகிறீர்கள்.

நெறிமுறைகள் ஒரு விருப்பத்தேர்வு அல்ல. அவை நமது வாடிக்கையாளர்கள், சமூகங்கள் மற்றும் ஒருவருக்கொருவர் இடையிலான நம்பிக்கையின் அடித்தளமாக அமைகின்றன. இந்த மதிப்புகளை ஒவ்வொரு நாளும் கடைப்பிடித்து வாழ்வதற்கு நன்றி. நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நேர்மையுடன் முன்னேறிச் செல்வோம்.

**ஜோன் ஹோரிபே**
Vice President,
Ethics and Chief Compliance Officer

# உள்ளே

நன்னடத்தைக் கோட்பாடு மற்றும் நன்னெறிகள் ....... 1

தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி ....... 2

தலைமை இணக்க அதிகாரியின் செய்தி ....... 3

தொலை நோக்கு நோக்கம் முக்கிய மதிப்புகள் ....... 5

நமது பொறுப்புகள் ....... 6
நாங்கள் செய்யக்கூடியவை ....... 7
நமது தலைவர்களின் எதிர்பார்ப்புகள் ....... 8

எவ்வாறு உடைத்துப் பேசுவது ....... 9
பழிவாங்கும் செயல்களைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம் ....... 10
Magna Hotline-ஐப் பயன்படுத்துதல் ....... 11
நெறிமுறைச் சரிபார்ப்புப் பட்டியல் ....... 11

நமது வாடிக்கையாளர்கள் ....... 12
நேர்மை, நியாயம் மற்றும் மரியாதையுடன் வணிகம் செய்தல் ....... 12
தன்னுடைமை ஆக்குதல் எதிர்ப்பு மற்றும் போட்டிச் சட்டங்களுக்கு இணங்குதல் ....... 13
இலஞ்ச எதிர்ப்புச் சட்டங்களுக்கு இணங்குதல் ....... 14
பரிசுகள் மற்றும் விருந்தோம்பல் ....... 15
வர்த்தக இணக்கம் ....... 16
லாபி செய்தல் மற்றும் அரசியல் பங்கேற்பு ....... 16

நமது பங்குதாரர்கள்/முதலீட்டாளர்கள் ....... 17
துல்லியமான பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல் ....... 17
பொது வெளிப்பாடுகள் ....... 18
நிலைத்தன்மை ....... 18

நமது பணியாளர்கள் ....... 19
சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு ....... 19
தனிப்பட்ட தரவின் பாதுகாப்பு ....... 19
பணிபுரியும் இடத்தில் மரியாதை ....... 20
மனித உரிமைகளை மதித்தல் ....... 21
பன்முகத்தன்மை மற்றும் உள்ளடங்கிய நிலை ....... 22
கவனமான தகவல்தொடர்பு ....... 22

நமது வணிகம் ....... 23
ரகசியத் தகவல்களின் பயன்பாடு ....... 23
முறையற்ற பங்கு வர்த்தகம் ....... 24
முதலீடுகள் மற்றும் கார்ப்பரேட் வாய்ப்புகள் ....... 25
சுயமாகக் கையாளுதல் மற்றும் உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் பழகுதல் ....... 26
வெளிப் பதவிகள் ....... 26

கூடுதல் ஆதாரங்கள் ....... 27

சொற்களஞ்சியம் ....... 28

# தொலை நோக்கு நோக்கம் முக்கிய மதிப்புகள்

## நமது தொலைநோக்கு

அனைவருக்கும் மற்றும் அனைத்திற்கும் போக்குவரத்தை மேம்படுத்துவது.

## நமது நோக்கம்

நமது குறிக்கோள், நமது தனித்திறமையைப் பயன்படுத்தி போக்குவரத்துத் துறையை சிறப்பானதாகவும் பொறுப்புடனும் உருவாக்க வேண்டும். வாகனங்களை அனைவருக்கும் பாதுகாப்பானதாகவும் தூய்மையானதாகவும் மாற்றும் தொழில்நுட்பங்கள், அமைப்புகள் மற்றும் கருத்துகளை உருவாக்குவதன் மூலம் நாம் அதைச் செய்வோம்.

## முக்கிய மதிப்புகள்

நமது முக்கிய மதிப்புகள் தனிநபர்களாகவும் ஒரு நிறுவனமாகவும் நாம் யார் என்பதன் பிரதிபலிப்பாகும்.

### பெரிதாக யோசியுங்கள்

ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையுடன் செயல்பட அதிகாரம் அளித்தல்.

### பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுங்கள்

நம்முடைய செயல்களிலும் கடமைகளிலும் நமக்கும் மற்றவர்களுக்கும் பொறுப்புக்கூறல்.

### ஒருபோதும் தேங்காதீர்கள்

தொடர்ந்து புதுமைப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் சரியான கேள்விகளைக் கேட்பது.

### ஒத்துழைப்புடன் இருங்கள்

மரியாதையுடனும் பணிவுடனும் நாம் ஒன்றாகச் செய்யும்போது நம்மால் முடிந்ததைச் செய்கிறோம்.



# நமது பொறுப்புகள்

## வாழ்க்கை எப்போதுமே பல தேர்வுகளால் நிறைந்தது, அவற்றில் பலவற்றை நாம் ஒவ்வொரு நாளும் கண் சிமிட்டும் நேரத்தில் முடிவு செய்கிறோம்.

ஆனால் இப்படி நாம் தேர்ந்தெடுக்கின்ற சில விஷயங்கள் மற்றவற்றை விட முக்கியமானவை. Magna-ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும்போது நாம் எடுக்கும் முடிவுகள், நம்மை மட்டுமல்லாமல், நிறுவனம் முழுவதையும் பிரதிபலிக்கின்றன.

**சுருக்கமாகச் சொன்னால், நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதுதான் நேர்மையை வலியுறுத்துவதாக உள்ளது.**

இன்றைக்கு வாகனத் தொழில் மிகவும் சிக்கலானதாகவும் சவாலானதாகவும் மாறிக்கொண்டு வருகிறது, எனவே நாம் அனைவரும் நமது வணிகத்தை நெறிமுறைப்படியும், நமது நிறுவனக் கொள்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்கவும் நடத்துவதற்கான நமது கடமையைப் புரிந்துகொள்வது அவசியமாகும். நமது நன்னடத்தை மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகள் ("கோட்பாடுகள்") சரியான தேர்வுகளைச் செய்யவும், நமது நெறிமுறைத் தரநிலைகளைப் பேணவும் நமக்கு வழிகாட்டியாகச் செயல்படுகின்றன.

ஊழியர்கள் அனைவரும் நமது கோட்பாடுகளைப் படித்து புரிந்துகொள்ள வேண்டும் மற்றும் எப்போதும் நெறிமுறை மற்றும் நேர்மையான வழியில் செயல்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். சரியான விஷயங்களைத் தேர்ந்தெடுப்பது, நமது தொழிலைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகள் மற்றும் சட்டங்களைப் பின்பற்றுவது ஆகியவை நமது இப்போதைய மற்றும் வருங்கால வெற்றிக்கு மிகவும் முக்கியம்.

இந்தக் கோட்பாடுகள், கார்ப்பரேட் மற்றும் குழு அலுவலகங்கள், உற்பத்திப் பிரிவுகள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் உட்பட, உலகெங்கிலும் உள்ள Magna-இன் எல்லாப் பணியாளர்களுக்கும் பொருந்தும். சப்ளையர்கள், ஆலோசகர்கள், தனித்த ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் மற்றும் Magna உடன் வணிகம் செய்யும் பிற மூன்றாம் தரப்பினர் உள்ளிட்ட நமது வணிகக் கூட்டாளர்களுக்கான எதிர்பார்ப்புகளை அமைக்கும் ஒரு **சப்ளையர் நன்னடத்தை மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகளையும்** நாம் பராமரிக்கிறோம்.

இந்தக் கோட்பாடுகளை மீறுவது, பணியாளர்களுக்குப் பணிநீக்கம் உட்பட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும். இந்தக் கோட்பாடுகளின் சில பிரிவுகள் சட்டப்பூர்வத் தேவைகளைப் பிரதிபலிக்கின்றன, அதாவது மீறல்களுக்கு அபராதம் விதித்தல், குற்றவியல் வழக்கு மற்றும் சிறைத்தண்டனை போன்ற கூடுதல் விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதாகும். நமது கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கும், நேர்மையை நிலைநாட்டுவதற்கும் அனைவரும் தங்களின் பங்களிப்பை ஒவ்வொரு நாளும் வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.



## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** நான் ஒரு Magna பணியாளர். இந்தக் கோட்பாடுகள் எனக்குப் பொருந்துமா?

**ப** ஆம். Magna International Inc.-இன் எல்லாப் பணியாளர்களுக்கும் (முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் உட்பட), அதன் அனைத்துச் செயல்பாட்டுக் குழுக்கள், பிரிவுகள், கூட்டு முயற்சிகள் மற்றும் உலகளவில் உள்ள பிற செயல்பாடுகளுக்கும் இந்தக் கோட்பாடுகள் பொருந்தும். இது நமது நிர்வாகக் குழு இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் பொருந்தும்.

**கே** நான் ஒரு Magna-இன் சப்ளையர். இந்தக் கோட்பாடுகள் எனக்குப் பொருந்துமா?

**ப** சப்ளையர்கள், ஆலோசகர்கள், தனித்த ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் மற்றும் பிற பிரதிநிதிகள் போன்ற நமது சார்பாகச் செயல்படும் அனைவரும், Magna-இன் **சப்ளையர் நன்னடத்தை மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகளைப்** பூர்த்தி செய்ய வேண்டும், அது இந்தக் கோட்பாடுகளில் இருப்பது போன்ற தரநிலைகளை அமைக்கிறது.

**கே** நான் இந்தக் கோட்பாடுகளை மீறினால் என்ன ஆகும்?

**ப** இந்தக் கோட்பாடுகளின் மதிப்புகளைப் பின்பற்றுவது நமக்கு மிகவும் முக்கியமாகும், அதனைப் பின்பற்றாவிட்டால் அது தீவிரமான குற்றமாகக் கருதப்படும். இந்தக் கோட்பாடுகளைப் பின்பற்றாதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒழுங்கு நடவடிக்கையின் வகை குற்றத்தின் தீவிரத்தன்மையைப் பொறுத்து அமையும், குற்றம் மிகத்தீவிரமாக இருந்தால் சம்பந்தப்பட்ட நபர் பணிநீக்கம் செய்யப்படுவது உள்ளிட்டவை நிகழலாம்.

இந்த ஆவணம் முழுதும் வழங்கப்பட்டுள்ள கேள்விகள் மற்றும் உதாரணங்கள் அந்தந்த விஷயத்தைப் புரியவைப்பதற்காக மட்டுமே, அவை நிஜமான நிகழ்வுகளை விவரிக்கவில்லை, நமது கோட்பாடுகளின் அடிப்படையில் எழக்கூடிய அனைத்து அல்லது மிகத்தீவிரமான சூழ்நிலைகளை விவரிப்பது இவற்றின் நோக்கம் அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.




## நாங்கள் செய்யக்கூடியவை

நிறுவனம் முழுவதிலும் ஒருமைப்பாடு கடைப்பிடிப்பதை உறுதிசெய்வதற்கு எங்களுக்கு உதவ அனைத்து ஊழியர்களையும் நாங்கள் நம்பியுள்ளோம். நாம் கண்டிப்பாக:

- நமது கோட்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணக்க கொள்கைகளை தெரிந்துகொள்ள வேண்டும்
- நமது கோட்பாடுகளின் சாத்தியமான மீறல் ஏதேனும் நிகழ்ந்ததாக நாம் நம்பினால் அல்லது நமது கோட்பாடுகள் குறித்து ஏதேனும் கேள்வி இருந்தால், உடைத்துப் பேசுங்கள்
- நமது கோட்பாடுகளை உருவாக்கும் அடிப்படைக் கொள்கைகளை ஒவ்வொரு நாளும் கடைப்பிடியுங்கள்

இதைச் சொல்லும் நமது வாசகம்: அவற்றை அறிந்திருங்கள். பேசுங்கள். அதைப் பின்பற்றுங்கள். Magna -வின் வெற்றி, நமது மக்கள் செயலில் பங்கு வைப்பதிலும், நாம் அனைவரும் நெறிமுறையான முறையில் வணிகம் நடத்துவதை உறுதி செய்வதிலும் சார்ந்துள்ளது.




# நமது தலைவர்களின் எதிர்பார்ப்புகள்

நிறுவனத்தின் தலைவர்கள் என்ற முறையில், தங்களுக்கு மிக உயர்ந்த நெறிமுறைத் தரநிலைகளை நிர்ணயித்து, தங்கள் குழுக்களுக்கு நெறிமுறை முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும் என்ற ஒரு சிறப்புப் பொறுப்பு நமது நிர்வாகிகளுக்கும், முதுநிலை அதிகாரிகளுக்கும், மேலாளர்களுக்கும் உள்ளது. தலைவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும், இந்தக் கோட்பாட்டிற்கு முரணான எந்தவொரு செயலையும் கண்டறிந்து, தங்கள் கவலைகளை உரிய நேரத்தில் தெரிவிக்க வேண்டும்.

நமது தலைவர்கள், தங்கள் குழுக்களுடன் நெறிமுறை சார்ந்த பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பது மற்றும் குழுவினர் தயங்காமல் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க ஊக்குவிப்பது உட்பட, பணியாளர்கள் தங்கள் கவலைகளைத் தெரிவிப்பதற்கு வசதியான ஒரு சூழலை உருவாக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம். இந்தக் கோட்பாடுகளில் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்கள், நிறுவனத்தில் எங்கும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய தலைவர்கள் முன்னுதாரணங்களாகச் செயல்படுவது முக்கியம்.

நேர்மையாகவும் நல்லெண்ணத்துடனும் பிரச்சனைகளைப் புகாராளிக்கும் எந்தவொரு பணியாளரும் (அல்லது எந்த நபரும்) பழிவாங்கப்படவில்லை என்பதை உறுதி செய்வதில் தலைவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நமது **பழிவாங்குதல் தடுப்புக் கொள்கையால்** இந்த வகையான பழிவாங்கல் வெளிப்படையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

# எவ்வாறு உடைத்துப் பேசுவது

## பழிவாங்கப்படுவோம் என்ற அச்சமின்றி பணியாளர்கள் தங்கள் கவலைகளைத் தெரிவிக்க சுதந்திரம் உள்ளது என்று உணரும் ஒரு கலாச்சாரத்தை வளர்க்கிறோம்.

நமது கோட்பாடுகள், கொள்கைகள் அல்லது சட்டத்திற்கு முரணான ஒரு செயல் குறித்து உங்களுக்கு ஏதேனும் கவலை இருந்தாலோ அல்லது அத்தகைய நடத்தையை நீங்கள் கண்டாலோ, தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக நீங்கள் அதைப் புகாரளிக்க வேண்டும்.

உங்கள் கவலைகளைப் பல வழிகளில் நீங்கள் தெரிவிக்கலாம்:

- **உங்கள் கவலையை உங்கள் மேலாளரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.** பெரும்பாலும், அவர்களால் வழிகாட்டுதலை வழங்கவும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் முடியும்.
- **ஓப்பன் டோர் செயல்முறை மூலம் உங்கள் கவலையை மற்றொரு நிறுவன ஆதாரத்திடம் தெரிவிக்கவும்.** உங்கள் மேலாளரிடம் ஒரு கவலையைத் தெரிவிப்பதில் உங்களுக்குச் சங்கடமாக இருந்தால், பின்வரும் ஆதாரங்கள் உட்பட, எந்தவொரு தலைவரிடமும் சென்று ஒரு சூழ்நிலையைப் பற்றி விவாதிக்கலாம் அல்லது கேள்விகளைக் கேட்கலாம்:
  - உள்ளூர்த் தலைமை
  - குழு/கார்ப்பரேட் தலைமை
  - மனிதவளங்கள்
  - பணியாளர் வழக்கறிஞர்/நியாயக் குழு/சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் குழு (பொருந்தக்கூடிய இடங்களில்)
  - அறநெறிகள் மற்றும் சட்ட இணக்கம்
  - உள் தணிக்கை
  - கார்ப்பரேட் பாதுகாப்பு
- **Magna Hotline-ஐத் தொடர்பு கொள்ளவும்.** Magna Hotline என்பது மற்றொரு ஆதாரமாகும், இதன் மூலம் நீங்கள் கோட்பாடுகள், Magna-இன் **சப்ளையர் நன்னடத்தை மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகள்** அல்லது **பணியாளர் சாசனத்திற்கு** முரணான நடத்தைகளைப் புகாரளிக்கலாம். எல்லாப் புகார்களும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு, கவனத்துடன் கையாளப்படுகின்றன. Magna Hotline சுதந்திரமான மூன்றாம் தரப்பினரால் நிர்வகிக்கப்படுகிறது, அத்துடன் 24 மணிநேரமும், வருடத்தின் 365 நாட்களும் 20+ மொழிகளில் கிடைக்கிறது.

இந்தக் கோட்பாடுகளில் உள்ள எதுவும், உங்கள் சொந்த நாட்டில் உள்ள சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட இடங்களில், முறைகேடுகளை அம்பலப்படுத்தும் ஒழுங்குமுறை அமைப்பின் வழிமுறையைப் பயன்படுத்துவதிலிருந்து உங்களைத் தடுக்காது.



# பழிவாங்கும் செயல்களைப் பொறுத்துக்கொள்ள மாட்டோம்

பழிவாங்குதல் என்பது, யாராவது தவறான நடத்தையைப் புகாரளிப்பதிலிருந்தோ அல்லது ஒரு விசாரணையில் பங்கேற்பதிலிருந்தோ அவர்களைத் தடுக்கும் நோக்குடன் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் ஆகும். பழிவாங்குதலில் வேலை நேரம் அல்லது ஊதியத்தைக் குறைத்தல், பணிநீக்கம், பதவி இறக்கம், இடைநீக்கம், அச்சுறுத்தல், துன்புறுத்தல், துஷ்பிரயோகம், சங்கடப்படுத்தல், அவமானம் அல்லது வாய்ப்புகள் மறுக்கப்படுதல் (பதவி உயர்வு, ஊதிய உயர்வு அல்லது ஓவர்டைம் போன்றவை) ஆகியவை அடங்கும். நேர்மையாகவும் நல்லெண்ணத்துடனும் கவலைகளைத் தெரிவிக்கும் பணியாளர்கள் அல்லது பிற நபர்களுக்கு எதிராக எந்த விதமான பழிவாங்கும் நடவடிக்கைகளையும் பொறுத்துக்கொள்ள மாட்டோம். மேலும் தகவல்களுக்கு, நமது **பழிவாங்குதல் தடுப்புக் கொள்கையைப்** பார்க்கவும்.



## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** என்னுடைய மேற்பார்வையாளர் நமது கோட்பாடுகளை மீறி நடக்கிறார் என்று நான் நினைக்கிறேன், ஆனால் அவரின் நடத்தையைப் பற்றி புகார் செய்தால் என்னுடைய வேலைக்கு ஆபத்து வருமோ என்று கவலைப்படுகிறேன். எனது மேலாளர் அவரது நடத்தை குறித்து நான் புகார் செய்ததை அறிந்தால், Magna என்னைப் பாதுகாக்குமா?

**ப** ஆம். நமது **பழிவாங்குதல் தடுப்புக் கொள்கையானது**, பணியாளர்களுக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கை எடுப்பதிலிருந்து தலைவர்களைத் தடைசெய்கிறது மற்றும் நேர்மையாகவும் நல்லெண்ணத்துடனும் கவலைகளைப் புகாரளிக்கும் பணியாளர்களைப் பாதுகாக்கிறது.

# Magna Hotline-ஐப் பயன்படுத்துதல்

**புகாரைச் சமர்ப்பித்தல்:** நீங்கள் ஆன்லைனில் அல்லது உங்கள் நாட்டில் உள்ள கட்டணமில்லா எண்ணை அழைப்பதன் மூலம் ஒரு புகாரைச் சமர்ப்பிக்கலாம் (இவ்விரண்டும் magnahotline.com தளத்தில் கிடைக்கும்). புகாரைச் சமர்ப்பித்த பிறகு, அந்தப் புகாரைக் கண்காணிப்பதற்காக உங்களுக்கு ஒரு பிரத்யேக கடவுச்சொல் வழங்கப்படும்.

**பெயர் குறிப்பிடப்படா தன்மை மற்றும் இரகசியத்தன்மை:** உள்ளூர்ச் சட்டங்களால் அனுமதிக்கப்பட்டால், நீங்கள் பெயரைக் குறிப்பிடாமல் ஒரு புகாரைச் சமர்ப்பிக்கலாம். இருப்பினும், உங்கள் அடையாளத்தை வெளிப்படுத்துமாறு உங்களை ஊக்குவிக்கிறோம், ஏனெனில் இது நமது புலனாய்வாளர்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக உங்களைத் தொடர்புகொள்ள உதவும். சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வரையில், விசாரணைக் காலத்திலும் அதற்குப் பின்னரும் உங்கள் அடையாளத்தைப் பாதுகாப்போம்.

**மதிப்பாய்வு மற்றும் விசாரணைகள்:** உங்கள் புகார் ஒரு வழக்கு மேலாண்மை சிஸ்டமில் பதிவு செய்யப்பட்டு, அதன் தன்மை, அவசரநிலை மற்றும் சாத்தியமான தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும். தேவைப்படும் பட்சத்தில், கார்ப்பரேட் மனிதவளம், அகத் தணிக்கை, கார்ப்பரேட் பாதுகாப்பு அல்லது சட்டத் துறை உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த ஓர் அனுபவமிக்க புலனாய்வாளர், உங்கள் புகாரை விசாரிக்க நியமிக்கப்படுவார்.

**செயல்நிலை புதுப்பிப்புகள்:** உங்களுக்கு வழங்கப்பட்ட பிரத்யேகக் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி, வலைத்தளம் மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உங்கள் புகாரின் செயல்நிலையை நீங்கள் சரிபார்க்கலாம். உங்கள் புகாரை விசாரிக்கும் நபர், விசாரணை நடைபெறும்போது உங்களிடம் மேலதிகக் கேள்விகளையும் கேட்கலாம்.

**சரியான நேரத்தில் நிறைவுசெய்தல்:** உங்கள் புகார் ஒரு நியாயமான காலக்கெடுவிற்குள் நிறைவு செய்யப்படும். ஒரு விசாரணை நிறைவடைந்த பிறகு, முதுநிலைத் தலைமையில் உள்ளவர்கள் விசாரணை முடிவுகளை மதிப்பாய்வு செய்து, (தேவைப்படும் இடங்களில்) ஒழுங்கு நடவடிக்கை உள்ளிட்ட தேவையான நடவடிக்கைகளை எடுப்பர்.

# நெறிமுறைச் சரிபார்ப்புப் பட்டியல்

சில சமயங்களில், சரியான தேர்வு எது என்று அறிவது கடினமாக இருக்கும் கடினமான சூழ்நிலைகளை நாம் எதிர்கொள்கிறோம். ஏதேனும் ஒரு முடிவைப் பற்றி உங்களுக்கு எப்போதாவது சந்தேகம் ஏற்பட்டால், உங்களுக்கு உதவுவதற்காக இந்த நெறிமுறைச் சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்தவும். இது நமது தேர்வுகளைக் கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் சட்டத்துடனும், அத்துடன் நமது அடிப்படை மதிப்புகளுடனும் சீரமைக்க நமக்கு உதவுகிறது.

ஒரு செயல் நெறிமுறை வாய்ந்ததா என்பதைத் தீர்மானிக்க, இந்த ஆறு கேள்விகளுக்கும் நீங்கள் “ஆம்” என்று பதிலளிக்க வேண்டும்:

1. இது சட்டப்படி சரியானதா?
2. இது இந்தக் கோட்பாடு, **பணியாளர் சாசனம்** மற்றும் தொடர்புடைய எல்லாக் கொள்கைகளுக்கும் இணங்குகிறதா?
3. ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் அனைவருக்கும் ஏற்படுத்தும் தாக்கத்தை நான் கருத்தில்கொண்டேனா?
4. இது ஒரு சிலருக்கு மட்டும் நன்மை அளிக்காமல், ஒரு நிறுவனம் என்ற வகையில் Magna உள்ள அனைவருக்கும் நன்மை அளிக்கிறதா?
5. எனது சக ஊழியர்கள், மேலாளர்கள் மற்றும் குடும்பத்தினர்களிடம் எனது முடிவை விளக்கி சொல்வதற்கு சௌகரியமாக உணர்வேனா?
6. எனது செயல்கள் செய்தித்தாள் அல்லது சமூக ஊடகத்தில் பகிரப்பட்டால், அவற்றை என்னால் நியாயப்படுத்த முடியுமா?

உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், நீங்கள் அதை நிறுத்திவிட்டு, உங்கள் மேலாளர், குழு அல்லது கார்ப்பரேட் சட்ட ஆலோசகர், பிராந்திய இணக்க அதிகாரி அல்லது Magna-இன் துணைத் தலைவர், நெறிமுறைகள் மற்றும் தலைமை இணக்க அதிகாரியிடம் வழிகாட்டுதலைப் பெற வேண்டும்.



# நமது வாடிக்கையாளர்கள்

## நேர்மை, நியாயம் மற்றும் மரியாதையுடன் வணிகம் செய்தல்

Magna-இன் வெற்றியை முன்னெடுத்துச் செல்வதில் நம் அனைவருக்கும் ஒரு கூட்டுப் பொறுப்பு உள்ளது.

இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் எல்லாரும் ஒருமைப்பாட்டுடன் செயல்படவேண்டும். நமக்குப் பொருந்துகிற சட்டங்களை நாம் எழுத்துபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் பின்பற்றவேண்டும், இந்த நெறிமுறைகளின் படி நடக்கவேண்டும், நாம் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்றவேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

பிற பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடனான நமது தொடர்புகளிலும் நாம் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்.

நாம் தொடர்பு கொள்ளும் சிலருக்கு வேறுபட்ட எண்ணங்கள் கருத்துகள் இருக்கலாம், அதை நாம் மதிப்பது அவசியம், நாம் எந்தெந்த நாடுகளில் இயங்குகிறோமோ அந்த நாடுகளின் கலாச்சாரங்கள் மற்றும் பழக்கவழக்கங்களைப் புரிந்து கொண்டு, நுண்ணுணர்வுடனும் அக்கறையுடனும் செயல்பட வேண்டும், நாம் எங்கெல்லாம் தொழில் செய்கிறோமோ அந்தச் சமூக மற்றும் சுற்றுச்சூழல்களில் நாம் ஏற்படுத்தும் தாக்கத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.



# தன்னுடைமை ஆக்குதல் எதிர்ப்பு மற்றும் போட்டிச் சட்டங்களுக்கு இணங்குதல்

நாம் பிற நிறுவனங்களுடன் தீவிரமாக, ஆனால் சுதந்தரமான மற்றும் நியாயமான போட்டிச்சூழலை மதித்து போட்டியிடுகிறோம்.

நுகர்வோர் சிறந்த விலையில் உயர்தரமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, பல நாடுகள் வலுவான போட்டியை ஊக்குவிக்கும் சட்டங்களை இயற்றியுள்ளன. இந்தச் சட்டங்களை மீறுவது உங்களுக்கும் Magna நிறுவனத்திற்கும் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

நாம் பொருந்தக்கூடிய அனைத்து தன்னுடைமை ஆக்குதல் எதிர்ப்பு மற்றும் போட்டிச் சட்டங்களுக்கும் இணங்க வேண்டும், அத்துடன் நமது வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருடன் நெறிமுறைமிக்க உறவுகளைப் பேண வேண்டும். விலைகள், தள்ளுபடிகள் அல்லது விற்பனை விதிமுறைகளை நிர்ணயிப்பது, உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது, சந்தைகளைப் பிரித்துக்கொள்வது, ஏல நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது, வாடிக்கையாளர்கள் அல்லது சப்ளையர்களைப் புறக்கணிப்பது, பணியாளர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பது அல்லது ஒருவருக்கொருவர் பிறரின் பணியாளர்களைப் பணியமர்த்த வேண்டாம் என்று ஒப்புக்கொள்வது போன்ற இந்தச் சட்டங்களை மீறும் எந்தவொரு நடவடிக்கையிலும் நாம் ஈடுபட மாட்டோம்.

மேலும் வழிகாட்டுதலுக்கு, நமது **தன்னுடைமை ஆக்குதல் எதிர்ப்பு மற்றும் போட்டிக் கொள்கையை** மதிப்பாய்வு செய்யவும்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** ஆட்டோ ஷாங்காய் கண்காட்சியில், நான் முன்பு என்னுடன் விற்பனைப் பிரிவில் பணியாற்றிய ஒரு சக பணியாளரைச் சந்தித்தேன், அவர் இப்போது ஒரு போட்டி நிறுவனத்தில் பணிபுரிகிறார். நாங்கள் இருவரும் இணைந்து மதிய உணவு சாப்பிட்டோம். சந்தையில் புதிதாக பொருட்களை வாங்கிக்கொண்டிருக்கிற ஒருவரைச் சமாளிப்பதற்காக நாம் இருவரும் ஒரு வியூகத்தை அமைக்கலாமா என்று அவர் கேட்டார். நான் யோசித்துச் சொல்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். நான் என்ன செய்திருக்க வேண்டும்?

**ப** முன்னாள் சக பணியாளருடன் மதிய உணவு உண்பது ஒரு பிரச்சனை இல்லை என்றாலும், ஒரு வாடிக்கையாளர் குறித்து போட்டியாளருடன் இணைந்து வியூகம் வகுக்க முயற்சிப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில், வியூக ஒருங்கிணைப்பு குறித்த உரையாடலை உடனடியாக நிறுத்திவிட்டு, இந்தத் தலைப்பைப் பற்றி விவாதிக்க முடியாது என்று உங்கள் முன்னாள் சக பணியாளரிடம் கூறுங்கள். அதன் பிறகு உடனடியாகச் சட்டத்துறை அல்லது இணக்கத்துறைக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்.



# இலஞ்ச எதிர்ப்புச் சட்டங்களுக்கு இணங்குதல்

ஒருபோதும் லஞ்சம் அல்லது சட்டவிரோதச் செயல்கள் மூலம் அல்லாமல், நாம் நெறிமுறையான வழிகளில் வணிகத்தைப் பெறுவதில் உறுதியுடன் இருக்கிறோம்.

லஞ்சம் என்பது ஒரு வணிக முடிவில் முறையற்ற முறையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக அல்லது ஒரு வணிக நன்மையை அடைவதற்காக மதிப்புமிக்க ஒன்றைப் பரிமாறிக்கொள்வது அல்லது வழங்குவதாகும். நாம் நேரடியாகவோ அல்லது மூன்றாம் தரப்பினர் மூலமாகவோ லஞ்சம், கமிஷன்கள் அல்லது காரியங்களை எளிதாக்குவதற்கான பேமெண்ட்களை வழங்குவதில்லை அல்லது ஏற்றுக்கொள்வதில்லை. மதிப்புள்ள எதையும் கொடுக்கும்போதும் அல்லது பெற்றுக்கொள்ளும்போதும், அவ்வாறு செய்வது வணிக முடிவைப் பாதிக்குமா அல்லது அத்தகைய உணர்வைத் தருமா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நாம் செலுத்தும் அனைத்து கொடுப்பனவுகளின் பதிவுகளும் எப்போதும் துல்லியமாகவும் முழுமையாகவும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். இந்தக் கடமைகள் எல்லாச் சூழ்நிலைகளிலும் பொருந்தும், எனினும் அரசு அதிகாரிகளை உள்ளடக்கிய விஷயங்களில் இவை குறிப்பாகக் கடுமையாகப் பின்பற்றப்பட வேண்டும்.

லஞ்சத்திற்கு எதிரான நமது உறுதி எந்த விதிவிலக்குகளும் இல்லாமல் நமது எல்லாச்செயல்பாடுகளுக்கும் பொருந்தும், உள்ளூர்ச் சட்டங்கள், கலாசாரப் பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தாலும் சரி.

லஞ்சம் இல்லாமல் வணிகம் செய்வதற்கான நமது அர்ப்பணிப்பைப் பற்றி மேலும் அறிய, நமது **லஞ்சம் மற்றும் முறையற்ற பேமெண்ட்கள் குறித்த கொள்கையைப்** பார்க்கவும்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** எனது நாட்டில், அரசாங்க ஊழியர்களுக்குச் சிறிய தொகை (பொதுவாக $100-க்குக் கீழ்) வழங்குவது வழக்கம், இதனால் அனுமதிகள் விரைவாக வழங்கப்படுகின்றன. நமது கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளின் கீழ் இந்தப் பேமெண்ட்களுக்கு எனக்கு அனுமதி உண்டா?

**ப** இல்லை. நமது **கோட்பாடும், லஞ்சம் மற்றும் முறையற்ற பேமெண்ட்கள் குறித்த கொள்கையும்,** பெரும்பாலும் எளிதாக்குதல் (அல்லது “கைக்கூலி”) பேமெண்ட்கள் என்று குறிப்பிடப்படும் இத்தகைய பேமெண்ட்களைத் தடை செய்கின்றன. இந்தப் பேமெண்ட்கள் சில நாடுகளில் சட்டப்பூர்வமானதாகவும் பொதுவானதாகவும் இருந்தாலும், மற்ற பல நாடுகளில் அவை சட்டவிரோதமானவை.

**கே** நமது பாதுகாப்பு இணக்கத்தைக் கண்காணிக்கும் ஓர் அரசு அதிகாரி, தனது மருமகனின் சுயவிவரத்தை என்னிடம் கொடுத்து, எனது துறையில் காலியாக உள்ள ஏதேனும் பதவிகளுக்கு அவரைப் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொண்டார். நான் சுயவிவரத்தை மதிப்பாய்வு செய்தேன், அவர் வலுவான திறன்களைக் கொண்டவராக இருந்தார். நான் என்ன செய்ய வேண்டும்?

**ப** இந்தக் கோரிக்கையைப் பற்றி மேற்பார்வையாளர், சட்டம் அல்லது இணக்கத்துறைக்கு உடனடியாகத் தெரியப்படுத்தவும். ஒரு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரராக, அவர் அந்தப் பதவிக்குத் தகுதியான மற்ற விண்ணப்பதாரர்களைப் போலவே கையாளப்பட வேண்டும். நமது உறவுகளைப் பேணிப் பாதுகாக்கும் அதேவேளையில் சட்டத்தையும் நமது மதிப்புகளையும் நாம் மதிப்பதை உறுதிசெய்ய, இது போன்ற கோரிக்கைகளைக் கவனத்துடன் கையாள வேண்டும்.

# பரிசுகள் மற்றும் விருந்தோம்பல்

பரிசுகளைக் கொடுக்கும்போதும் பெறும்போதும், விருந்தோம்பலில் ஈடுபடும்போதும் நாம் கவனத்துடன் முடிவெடுக்கிறோம்.

நமது வணிகக் கூட்டாளர்களுடனான நமது உறவுகள் நேர்மை மற்றும் சிறந்த வணிகத் திறனின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். நமது வணிக முடிவுகளைப் பாதிக்கும் அல்லது பாதிக்கக்கூடும் என்று தோன்றும் பரிசுகளையோ விருந்தோம்பல்களையோ நாம் ஒருபோதும் கொடுப்பதோ அல்லது ஏற்றுக்கொள்வதோ இல்லை.

வணிகப் பரிசுகள் அல்லது விருந்தோம்பல்களை அவை நியாயமானவையாகவும், எப்போதாவது வழங்கப்படுபவையாகவும், மிதமான மதிப்புடையவையாகவும் இருந்தால் மட்டுமே நாம் கொடுக்கவோ பெறவோ வேண்டும். நாம் வழங்குகிற ஏதாவது ஒரு பரிசோ அல்லது பொழுதுபோக்கு அம்சமோ நமது செலவு அறிக்கைகள் மற்றும் Magna -இன் ஆவணப் புத்தகங்கள் மற்றும் பதிவுகளில் துல்லியமாகவும் வெளிப்படையாகவும் பதிவுசெய்யப்பட வேண்டும்.

அதிகரித்துவரும் சட்ட ஆபத்துகள் காரணமாக, அரசு அதிகாரிகளுடன் பழகும்போது நாம் எல்லாரும் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும். அரசு அதிகாரிகளுக்கு பரிசுகள் அல்லது பொழுதுபோக்கு அம்சங்கள் வழங்குவதற்கு எழுத்து மூலம் ஒப்புதல் பெற வேண்டும். தேவையான அனுமதிகள் பற்றிய மேலதிக தகவல்களையும், பரிசுகள் மற்றும் விருந்தோம்பல் பற்றிய கூடுதல் தகவல்களையும் நமது **பரிசுகள் மற்றும் விருந்தோம்பல் கொள்கையில்** காணலாம்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** சாம்பியன்ஷிப்பில் எனக்குப் பிடித்த அணி விளையாடுவதைக் காண, நமது சப்ளையர் ஒருவர் விமானக் கட்டணம் மற்றும் தங்கும் வசதிகளை வழங்கியுள்ளார். இது அனுமதிக்கப்பட்டுள்ளதா?

**ப** இல்லை. நமது வணிக முடிவுகள் எப்போதும் Magna-இன் சிறந்த நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த ஆடம்பரமான பரிசை ஏற்றுக்கொள்வது எதிர்காலக் கொள்முதல் முடிவுகளில் அந்தச் சப்ளையரை நாம் ஆதரிக்கிறோம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தலாம். நியாயமான, எப்போதாவது தரப்படுகிற மற்றும் மிதமான மதிப்பைக் கொண்ட வணிகப் பரிசுகள் மற்றும் விருந்தோம்பல்களை மட்டுமே நாம் ஏற்றுக்கொள்ளலாம். சந்தேகம் இருந்தால், சட்டம் அல்லது இணக்கத்துறையுடன் சரிபார்த்துக் கொள்ளவும்.

**கே** பல ஆண்டுகளாக எனது பிரிவில் பலமுறை சுற்றுச்சூழல் தணிக்கைகளை நடத்திய ஓர் அரசு தணிக்கையாளருக்கு அடுத்த மாதம் குழந்தை பிறக்கவிருக்கிறது. நான் அவருக்கு ஒரு பாட்டில் விஸ்கியை பரிசாக அளிக்க விரும்புகிறேன். இதற்கு அனுமதி உண்டா?

**ப** அரசு அதிகாரிகளுக்கு ஒரு பரிசை அல்லது விருந்தோம்பலை வழங்குவதில் கூடுதல் கவனம் தேவை, நமது **பரிசுகள் மற்றும் விருந்தோம்பல் கொள்கையின்** அடிப்படையில் முன் அனுமதி பெற வேண்டும். மேலும் தகவலுக்கு, சட்டம் அல்லது இணக்கத்துறையைக் கலந்தாலோசிக்கவும்.



# வர்த்தக இணக்கம்

ஓர் உலகளாவிய நிறுவனம் என்ற முறையில், நாம் பல வர்த்தக இணக்கம் மற்றும் சுங்கச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டவர்கள், இந்தச் சட்டங்களின் கீழ் உள்ள நமது கடமைகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

சில நாடுகள், அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடன் வர்த்தகம் செய்வதைத் தடைசெய்யும் சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதாரத் தடைகளுக்கு நாம் இணங்க வேண்டும். நமது தயாரிப்புகளும் தொழில்நுட்பமும் எல்லைகளைக் கடந்து விநியோகிக்கப்படும் விதத்தைக் கட்டுப்படுத்தும் அனைத்து ஏற்றுமதி மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகளுக்கும் நாம் இணங்க வேண்டும்.

மேலும் வழிகாட்டுதலுக்கு, நமது **பொருளாதாரத் தடைகள் மற்றும் வர்த்தகத் தடைக் கொள்கையை** மதிப்பாய்வு செய்யவும்.

# லாபி செய்தல் மற்றும் அரசியல் பங்கேற்பு

நாம் பொருந்தக்கூடிய சட்டங்களைப் பின்பற்றுகிறோம், அரசு அதிகாரிகளுடன் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்கிறோம்.

ஆதரவு நடுவது மற்றும் அரசியல் சார்ந்த பங்களிப்புகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் மிகவும் சிக்கலானவையாக இருக்கலாம், நாம் தொழில் நடத்தும் பகுதிகள் ஒவ்வொன்றிலும் இவை வெகுவாக வேறுபடலாம். ஆகவே நாம் நிதி மற்றும் ஆதரவு உள்ளிட்ட நமது பரப்புரை மற்றும் அரசியல் பங்கேற்பு முயற்சிகளை மிகுந்த கவனத்துடன் அணுக வேண்டும்.

இந்த விவகாரங்களைக் கையாள்வதற்குச் சிறப்பாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கார்ப்பரேட் அலுவலகப் பிரதிநிதியிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதி பெறாமல், எந்தவொரு அரசாங்க மட்டத்திலும் நாம் லாபி செய்தல் நடவடிக்கைகளில் ஈடுபடவோ அல்லது Magna-இன் சார்பாக அரசியல் பங்களிப்புகளை (பண நன்கொடைகள், பொருட்கள் அல்லது சேவைகள் உட்பட) வழங்கவோ கூடாது. மேலும் தகவலுக்கு, அரசாங்க விவகாரங்கள் குழு (மேலும் தகவலுக்கு MagNET-இல் உள்ள **அரசாங்க விவகாரங்கள்** பக்கத்தைப் பார்வையிடவும்), சட்டம் அல்லது இணக்கத்துறை உறுப்பினர் ஒருவரைத் தொடர்பு கொள்ளவும்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** நமது புதிய ஆலையின் கட்டிட வடிவமைப்பிற்கு நகர்மன்ற அனுமதி பெறுவதில் சிரமம் உள்ளது. நகராட்சி மன்ற உறுப்பினர்களில் ஒருவரை எனக்கு நன்கு தெரியும், அவர் ஏன் இதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதை விளக்குவதற்காக அவரை காஃபி அருந்த அழைக்க விரும்புகிறேன். நான் அவ்வாறு செய்யலாமா?

**ப** இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அதிகாரிகளுடன் இத்தகைய சந்திப்பு பொதுவாக முடிவெடுக்கும் செயல்முறையைப் பாதிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படுவதால், இது உள்ளூர்ச் சட்டத்தின் கீழ் லாபி செய்வதாகக் கருதப்பட வாய்ப்புள்ளது. இந்தச் சிக்கல்களைக் கையாளுவதற்குக் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட கார்ப்பரேட் அலுவலகப் பிரதிநிதியின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி நாம் லாபி செய்யும் எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது.

# நமது பங்குதாரர்கள்/ முதலீட்டாளர்கள்

## துல்லியமான பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் நிதி அறிக்கையைச் சமர்ப்பித்தல்

நாம் நமது நிதி நிலையைத் துல்லியமாகப் பிரதிபலிக்கும் கணக்குப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் பராமரிக்கிறோம்.

Magna-இன் நம்பகத்தன்மை நமது நிதி அறிக்கைகளின் துல்லியத்தைப் பொறுத்தது, மேலும் நிதிநிலை அறிக்கை தொடர்பான அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்களையும் நாம் பின்பற்ற வேண்டும். நமது நிதிப் பதிவுகளில் முழுமையான துல்லியத்தைக் கடைப்பிடிப்பது நம் அனைவரின் பொறுப்பாகும்.

நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் நிறுவனத் தகவல்களின் துல்லியமான பதிவுகளை நாம் பராமரிக்கத் தவறினால், Magna கடுமையான பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும். நாம் பரிவர்த்தனைகளைத் துல்லியமாகப் பதிவுசெய்து, ஏதேனும் நிச்சயமற்ற தன்மை அல்லது சாத்தியமான முரண்பாடுகளை உடனடியாகப் புகாரளிக்க வேண்டும். நமது நிதிசார்க் கட்டுப்பாடுகள், நமது அறிக்கைகள் துல்லியமாகவும் சரியான நேரத்திலும் இருப்பதை உறுதிசெய்ய உதவுகின்றன. தவறான அல்லது தவறாக வழிநடத்தும் உள்ளீடுகள் மூலம் இந்தக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் பொறுத்துக்கொள்ள மாட்டோம். அவ்வாறு செய்வது நமது கோட்பாட்டின் கடுமையான மீறலாகும் மற்றும் கிரிமினல் குற்றமாகவும் இருக்கலாம்.



### கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** நான் கணக்கியல் பிரிவில் பணிபுரிகிறேன், சமீபத்தில் பெரிய சப்ளையர் இன்வாய்ஸ்கள் பல என்னிடம் வந்தன. என்னுடைய மேலாளர் இவற்றை நான் அடுத்த காலாண்டில் பதிவுசெய்ய வேண்டும் என்றார். காரணம் இந்த இன்வாய்ஸ்களை அடுத்த காலாண்டில் பதிவுசெய்தால், நம்முடைய நிதிநிலை முடிவுகள் இன்னும் சிறப்பாக அமையும், நமது பங்குகளின் விலையும் மேம்படும் என்று அவர் சொன்னார். அவர் சொன்னதை நான் பின்பற்ற வேண்டுமா?

**ப** இல்லை. தேதிகளில் ஏற்படும் தவறுகள் அல்லது செலவுகளைப் புகாரளிப்பதில் ஏற்படும் தாமதம் நமது நிதி முடிவுகளைப் பாதிக்கக்கூடும். எல்லா நிதித் தகவல்களையும் துல்லியமாகப் பதிவு செய்யத் தவறுவது, Magna நிறுவனத்திற்கு உதவும் நோக்கத்துடன் செய்யப்பட்டாலும், இது இந்தக் கோட்பாடு மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்குக் கொள்கைகளை மீறுவதாகும். இதைச் செய்யும்படி நம்மிடம் கேட்கப்பட்டால், நாம் மறுத்துவிட வேண்டும். நாம் சங்கடமாக உணர்ந்தாலோ அல்லது தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்பட்டாலோ, நாம் உடனடியாக அந்தச் சூழ்நிலையைப் பற்றிப் புகாரளிக்க வேண்டும். புகாரளிக்கப் பல வழிகள் உள்ளன, உதாரணமாக, குழும அல்லது கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள ஒரு நிதி அதிகாரி, சட்டத் துறை அல்லது இணக்கத்துறை ஆகியோரிடம் புகாரளிக்கலாம். நாம் Magna Hotline மூலமாகவோ அல்லது பிற பொருத்தமான சேனல்கள் மூலமாகவோ இந்தப் பிரச்சனையைப் புகாரளிக்கலாம் (கூடுதல் விவரங்களுக்கு, மேலே உள்ள “எவ்வாறு உடைத்துப் பேசுவது” என்பதைப் பார்க்கவும்).



## பொது வெளிப்பாடுகள்

ஒரு பொது நிறுவனமாக, Magna தனது பொது ஆவணங்களில் முழுமையான, துல்லியமான தகவல்களை சரியான நேரத்தில் பகிர வேண்டும். இது ஒரு சட்டப்பூர்வப் பொறுப்பாகும், நமது வணிகம், செயல்பாடுகள் மற்றும் நிதி நிலைமைகளை வெளிப்படுத்துதல் தொடர்பான அனைத்துச் சட்டங்களையும் பின்பற்றுவதன் மூலம் இதை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம்.

தகவல்களை வெளியிடும் பொறுப்பு Magna-க்கு இருந்தாலும், அவ்வாறு செய்வதற்கு அங்கீகாரம் பெற்ற குறிப்பிட்ட நபர்கள் மூலமாக மட்டுமே அது தகவல்களை வெளியிட வேண்டும். நமது **கார்ப்பரேட் தகவல் வெளிப்படுத்தல் கொள்கையின்** கீழ் உங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, ஊடகங்கள் அல்லது பங்குதாரர்கள் உட்பட வேறு யாருடனும் பொதுவில் இல்லாத Magna தகவல்களை நீங்கள் விவாதிக்கக் கூடாது. கூடுதல் வழிகாட்டுதலுக்கு, நமது **கார்ப்பரேட் தகவல் வெளிப்படுத்தல் கொள்கையைப்** பார்க்கவும்.

## நிலைத்தன்மை

எதிர்காலத்தில் செயல்படும் திறனைப் பாதிக்காமல், தற்போதைய பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உறுதியுடன் இருக்கிறோம்.

நமது தயாரிப்புகள், செயல்முறை மற்றும் பணியாளர்களின் மூலம் நிலைத்தன்மையை அடைவதில் நாம் கொண்டுள்ள நீண்டகால அர்ப்பணிப்பைப் பற்றி Magna பெருமை கொள்கிறது. நமது பங்குதாரர்கள் அனைவருடனும் இணைந்து பணியாற்றுவதன் மூலம், நாம் ஒரு சிறந்த நாளைய தினத்திற்கான தயாரிப்புத் தீர்வுகளை வழங்கி வருகிறோம், அதே சமயம் நாம் நமது சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்து, நமது குழுக்களுக்கும் சமூகங்களுக்கும் நன்மை பயக்கிறோம்.

நமது சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கும், பொறுப்பான மூலப்பொருட்களைப் பெறுவதை மேம்படுத்துவதற்கும், நமது சமூகப் பொறுப்புகளை வலுப்படுத்துவதற்கும் லட்சிய இலக்குகளை நிர்ணயித்துள்ளோம்.

Magna-இன் நிலைத்தன்மை உத்தி குறித்த மேலும் தகவலுக்கு, நமது பொது வெளிப்பாடுகளையும் உறுதிமொழிகளையும் பார்க்கவும்.

# நமது பணியாளர்கள்

சர்வதேச நிறுவனமான மேக்னாவின் பலங்களில் ஒன்று நமது ஊழியர்கள் பன்முகத்தன்மையோடு இருத்தல். வெவ்வேறு பின்னணிகள், திறன்கள், மற்றும் கருத்துகளைக் கொண்டவர்களை மதிக்கிறோம் மற்றும் மரியாதை அளிக்கிறோம்.

## சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

பாதுகாப்பான பணியிடத்தையும் தூய்மையான சுற்றுச்சூழலையும் பராமரிப்பதில் உறுதியாக உள்ளோம். நமது அனைத்து செயல்பகுதிகளிலும் மற்றும் விநியோகச் சங்கிலிகள் அனைத்திலும் தொழில்சார் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புகளில் நாம் ஒரு தொழில்துறையின் முன்னோடியாகத் திகழ விரும்புகிறோம்.

நமது வேலைகள் மற்றும் பணிபுரியும் இடங்களுக்குப் பொருந்தக்கூடிய எல்லாச் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு அபாயங்களிலிருந்து உங்கள் பணியிடம் விடுபட்டிருப்பதை உறுதிசெய்வதற்கும், ஏதேனும் சம்பவங்கள், காயங்கள் அல்லது பாதுகாப்பற்ற நிலைமைகளை உடனடியாகப் புகாரளிப்பதற்கும் நாம் அனைவருமே பொறுப்புதான்.

சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மீதான நமது அர்ப்பணிப்பு நமது **பணியாளர் சாசனம்** மற்றும் **செயல்பாட்டுக் கொள்கைகளில்** விளக்கப்பட்டுள்ளது. கூடுதல் வழிகாட்டுதலுக்கு, நமது **சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கொள்கையையும்** பார்க்கவும்.

## தனிப்பட்ட தரவின் பாதுகாப்பு

நாம் நமது ஊழியர்களின் தனியுரிமைகளை மதிக்கிறோம் மற்றும் அவர்களுடைய தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்க உறுதி பூண்டுள்ளோம். தனிப்பட்ட தரவைச் சட்டரீதியாகவும், வெளிப்படையாகவும், நியாயமாகவும் செயலாக்குகிறோம். தனிநபர் தரவின் ஒருமைப்பாடு மற்றும் இரகசியத்தன்மையைப் பாதுகாக்க நியாயமான நடவடிக்கைகளை எடுப்போம்.

தரவுப் பாதுகாப்புச் சம்பவம், இணையத் தாக்குதல் அல்லது தனிப்பட்ட தரவு மீறல் உள்ளிட்ட ஏதேனும் ஒன்றை நீங்கள் கண்டறிந்தாலோ அல்லது சந்தேகித்தாலோ, தரவுத் தனியுரிமை, சட்டத் துறை அல்லது தகவல் பாதுகாப்பு, இடர் மற்றும் இணக்கக் குழுவிடம் (ISRC) அறிவிக்கவும் அல்லது உடனடியாக Magna Hotline-ஐத் தொடர்பு கொள்ளவும். மேலும் வழிகாட்டுதலுக்கு, நமது **தரவுத் தனியுரிமைக் கொள்கையைப்** பார்க்கவும்.

### கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** நான் மனித வளத்துறையில் பணிபுரிகிறேன். சமீபத்தில், நம்முடைய ஊழியர்கள் அனைவருடைய வீட்டு முகவரியைத் தருமாறு ஒரு சந்தைப்படுத்துதல் நிறுவனம் என்னிடம் கேட்டது, அதைப் பயன்படுத்தி அவர்கள் ஒரு புதிய மருத்துவமனை பற்றிய மதிப்புள்ள விவரங்களை அவர்களுக்கு அனுப்புவார்கள். இந்த விவரத்தின் மூலம் ஊழியர்கள் பலன்பெறக்கூடும் என்றாலும் நான் அந்தச் சந்தைப்படுத்துதல் நிறுவனத்திற்கு முகவரிகளைத் தர மறுத்துவிட்டேன். நான் செய்தது சரியான காரியமா?

**ப** ஆம். நமது வீட்டு முகவரிகள் தனிநபர்களின் விவரங்கள் ஆகும், அவற்றை நியாயமான தொழில் மற்றும் பணிக்காரணங்களுக்காக அல்லது சட்டத்தால் கோரப்பட்டால் மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். இந்த வழக்கில், ஒரு சேவையைப் பணியாளர்களிடம் சந்தைப்படுத்துதலுக்காகத் தனிப்பட்ட தரவை வெளிப்படுத்துவது, ஏற்கக்கூடிய காரணம் அல்ல. அவ்வாறு செய்வது நமது கோட்பாடுகளை மீறுவதாகவும் மற்றும் உள்ளூர்த் தனியுரிமைச் சட்டங்களின்படி அது□சட்டவிரோதமாகவும் இருக்கலாம்.



# பணிபுரியும் இடத்தில் மரியாதை

நமது **பணியாளர் சாசனத்திற்கு** இணங்க, ஒரு நியாயமான மற்றும் சமத்துவமான பணிச்சூழலை வழங்குவதில் உறுதியாக இருக்கிறோம். ஒரு நபரின் கண்ணியத்தைக் குறைக்கும் அல்லது விரோதமான, அச்சுறுத்தும் பணிச்சூழலை உருவாக்கும் நடத்தைகளை நாம் பொறுத்துக்கொள்வதில்லை.

எந்தவொரு வன்முறை, பாகுபாடு, துன்புறுத்தல் அல்லது மிரட்டலையும் நாம் சற்றும் சகித்துக்கொள்வது இல்லை, அனைவருக்கும் மரியாதையான பணிச்சூழலை உறுதிசெய்ய உதவும் நன்கு நிறுவப்பட்ட கொள்கைகளும், முறையற்ற நடத்தைகளைச் சரிசெய்வதற்கான புகார் மற்றும் விசாரணை நடைமுறைகளும் நம்மிடம் உள்ளன. நமது உள்ளூர் கொள்கைகள் பன்முகத்தன்மையுடன் இருக்கின்றன, அவை தனிநபர்களின் பழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் மதிக்கப்படுவதை ஊக்குவிக்கின்றன, மற்றும் தேவைப்படுபவர்களுக்கு சட்டரீதியான உதவிகளையும் வழங்குகின்றன.

ஒரு சக பணியாளர் நம்மையோ அல்லது மற்றவர்களையோ சங்கடப்படுத்தும் விதத்தில் நடந்துகொண்டால், நாம் குரல் கொடுக்க வேண்டும், அத்துடன் பாகுபாடு, துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தும் நடத்தை போன்றவற்றை உடனடியாகப் புகாரளிக்க வேண்டும்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** என் மேலாளர் எனக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் விதமான கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். கடந்த வாரம், நாங்கள் இருவரும் மட்டும் இருந்த ஓர் இரவு உணவின்போது அவர் எனக்கு வழிகாட்டுவதாக முன்வந்தார். நான் வேண்டாம் என்று சொன்னேன், ஆனால் இப்போது அவர் என்னிடம் கடுமையாக நடந்துகொள்கிறார். நான் என்ன செய்ய வேண்டும்?

**ப** விரும்பத்தகாத கவனம், பொருத்தமற்ற நகைச்சுவைகள் மற்றும் வரவேற்கத்தகாத நடத்தைகள் போன்றவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. உங்கள் கவலைகளை ஓப்பன் டோர் செயல்முறை மூலமாகவோ அல்லது Magna Hotline மூலமாகவோ மற்றொரு மேலாளரிடம் தெரிவிக்க வேண்டும். நல்லெண்ணத்துடன் உங்கள் கவலையைப் புகாரளித்ததற்காக, பழிவாங்கப்படுவதிலிருந்து Magna-இன் பழிவாங்கல் எதிர்ப்புக் கொள்கை உங்களைப் பாதுகாக்கிறது.



# மனித உரிமைகளை மதித்தல்

பணியாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பது Magna-இன் கலாச்சாரத்தின் மையமாக உள்ளது. நாம் நமது ஊழியர்களுக்கு நேர்மையான பணிபுரியும் நிலைமையை வழங்குகிறோம், நமது நிறுவனம் அல்லது விநியோக சங்கிலியில் அடிமை தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள் அல்லது கட்டாயத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதை நாம் ஊக்குவிப்பதில்லை. நமது **உலகளாவிய தொழிலாளர் தரநிலைகள்,** ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) 8 அடிப்படை சாசனங்கள் மற்றும் வேலை தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் உரிமைகள் குறித்த ILO பிரகடனம் ஆகியவற்றை அங்கீகரிக்கின்றன.

தேசிய சட்டத் தேவைகளுடன், பாதுகாப்பான மற்றும் மரியாதையான சூழலில் நியாயமான நிபந்தனைகளின் கீழ் சுதந்திரமாக ஒத்துழைப்பதற்கு மற்றும் வேலை செய்வதற்கான நமது ஊழியர்களின் உரிமையை அங்கீகரிக்கிறோம், அதற்காக பொருந்தக்கூடிய வேலை தரநிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் அதைத் தாண்டிச் செயல்படுவதற்கும் நாம் முயற்சிக்கிறோம்.

அத்துடன் நமது **பணியாளர் சாசனத்திற்கு** இணங்க, தனிப்பட்ட குணாதிசயங்களைப் பொருட்படுத்தாமல், புறநிலை அளவுகோல்கள், உள் சமத்துவம் மற்றும் வெளிப் போட்டித்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பணியாளர்களுக்கு நியாயமான முறையில் ஊதியம் வழங்கும் பாகுபாடற்ற ஊதிய நடைமுறைகளுக்கான நமது உறுதிப்பாட்டையும் கொண்டுள்ளோம். நாம் இணைந்து வேலை செய்யும் சப்ளையர் அல்லது பிற நிறுவனம் பொருந்தும் சட்டங்களுக்கு இணங்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.




## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** நமது சப்ளையர்களில் ஒருவர் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துகிறார் என்று நான் சந்தேகிக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?

**ப** உடனடியாக இதை ஒரு மேலாளர், சட்டத் துறை, இணக்கத்துறை அல்லது கொள்முதல் துறையிடம் புகாரளிக்கவும் அல்லது Magna Hotline வழியாகத் தெரிவிக்கவும்.

**கே** மிச்சிகனில் உள்ள நமது ட்ராய் அலுவலகத்தில் பணிபுரியும் ஒருவரை, நமது வட அமெரிக்கச் சப்ளையர்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரு பதவிக்குப் பதவி உயர்வு அளிப்பது குறித்து நான் பரிசீலித்து வருகிறேன். அவருக்குத் தேவையான எல்லாத் தகுதிகளும் இருந்தாலும், அவரது உடல் ஊனம் காரணமாக நமது சப்ளையர்கள் சிலர் அசௌகரியமாக உணரக்கூடும் என நான் கவலையடைகிறேன். மற்றொருவருக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கு இது ஒரு நியாயமான காரணமா?

**ப** இல்லை. ஊனம் போன்ற சட்டப்பூர்வமாகப் பாதுகாக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல், அனைவருக்கும் சமமான முன்னேற்ற வாய்ப்பை வழங்குவதற்கு நாம் பாடுபடுகிறோம். அவர் அந்த வேலைக்கான சரியான தகுதிகளைக் கொண்டிருந்து, வேலையின் அவசியமான கடமைகளைச் சரியாக செய்ய முடிந்தால், அவரது உடல் ஊனத்தின் அடிப்படையில் அவருக்கான பதவி உயர்வை நாம் கண்டிப்பாக மறுக்கக் கூடாது.

# பன்முகத்தன்மை மற்றும் உள்ளடங்கிய நிலை

நமது ஊழியர்கள் நமது உலகளாவிய நிறுவனத்தின் முக்கியப் பங்குதாரர்கள் ஆவர். நாம் பலதரப்பட்ட பின்னணிகள், பார்வைகள், திறன்களைக் கொண்ட திறமைகளைக் கவர, பணியமர்த்த, தக்கவைக்க இலக்குக் கொண்டுள்ளோம். நமது **பணியாளர் சாசனத்தில்** ஆழமாகக் கூறப்பட்டுள்ளபடி, ஒரு பாதுகாப்பான, மரியாதையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பணியிடத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம், அங்கு நமது பணியாளர்கள் தங்களின் முழுமையான ஆளுமையுடன் பணிபுரியலாம், நமது முக்கிய விழுமியங்களைக் கடைப்பிடிக்கலாம், நீடித்த முடிவுகளை அடையலாம் மற்றும் நமது உலகளாவிய பிராண்டை மேம்படுத்தலாம்.

பொருந்துகின்ற அனைத்து ஊழியர் மற்றும் பணிச்சட்டங்களையும் நாம் மதித்து நடக்கிறோம். உதாரணமாக, பாரபட்சம் காட்டுதல் மற்றும் துன்புறுத்துதலைத் தடுக்கும் சட்டங்கள், வேறுபாடுகளுக்குச் சரியாக இடமளிக்கும் சட்டங்கள் போன்றவை. சட்டத்தால் பாதுகாக்கப்படும் காரணங்களின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல், அனைவருக்கும் சமமான வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முன்னேற்ற வாய்ப்புகளை வழங்குவதில் உறுதியாக உள்ளோம்.

# கவனமான தகவல்தொடர்பு

வேலையிடத்திலோ அல்லது பணிக்கு வெளியிலோ, நாம் பேசுவதும் எழுதுவதும் Magna மதிப்புகளையும் தரங்களையும் பிரதிபலிக்க வேண்டும்.

Magna-இன் நற்பெயரையும் நமது நற்பெயரையும் பாதுகாக்க, நாம் எழுதும் எதுவும் ஒரு நாள் பொதுவெளியில் வரக்கூடும் என்பதைப் புரிந்துகொண்டு, கவனமாக எழுத வேண்டும். சுதந்திரமான தகவல்தொடர்பிற்கான அனைவரின் உரிமையையும் மதிக்கிறோம். எனினும் Magna-இன் நற்பெயருக்குத் தீங்கு விளைவிக்கும், சப்ளையர்கள் அல்லது வாடிக்கையாளர்களை அவமதிக்கும், ரகசியத் தகவல்களை வெளிப்படுத்தும் அல்லது Magna-இன் பதிப்புரிமை மற்றும் காப்புரிமை உரிமைகளை மீறும் எதையும் நாம் ஆன்லைனில் அல்லது சமூக ஊடகங்களில் இடுகையிடக்கூடாது.

ஒரு செய்தியாளர், தொழில்துறை வல்லுநர் அல்லது பங்குதாரர் போன்ற யாராவது Magna பற்றிப் பேசுமாறு நம்மிடம் கேட்டால், நாம் எந்தக் கருத்தையும் தெரிவிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக, நாம் அவர்களை ஓர் அங்கீகாரம் பெற்ற Magna பிரதிநிதியிடம் பரிந்துரைக்க வேண்டும்.

நமது **கவனமான தகவல்தொடர்புக் கொள்கை,** நமது **உலகளாவிய மின்னஞ்சல், இணையம் மற்றும் சமூக ஊடகக் கொள்கை** மற்றும் நமது **வெளி ஊடகத் தகவல்தொடர்புக் கொள்கை** ஆகியவை தகவல்தொடர்பு சம்மந்தப்பட்ட கேள்விகளுக்குத் தீர்வுகளை நன்கு விளக்கும் பயனுள்ள ஆவணங்கள் ஆகும்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** Facebook-இல் எனக்கு 250 நண்பர்கள் இருக்கிறார்கள், அதில் நமது சப்ளையர்களில் ஒருவர் மீதான எனது ஏமாற்றங்களை அவ்வப்போது வெளிப்படுத்துவேன். இதனை நான் என்னுடைய சொந்த நேரத்தில்தான் செய்கிறேன், என்னுடையசெட்டிங்ஸ்தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்டுள்ளது இதனால் என்னுடைய நண்பர்கள்மட்டும் குடும்பத்தினர்மட்டும்தான் இவற்றை பார்க்க இயலும். இது அனுமதிக்கப்பட்டுள்ளதா?

**ப** இல்லை. சமூக ஊடகங்களில் இடப்படும் பதிவுகள் எப்போதும் தனிப்பட்ட முறையில் இருப்பதில்லை. நமது சப்ளையர்களைப் பற்றி எந்தவொரு பொது மன்றத்திலும் கருத்து தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டும். நமது சப்ளையர் குறித்த கவலை இந்தக் கோட்பாடுகளை மீறுவது சம்பந்தப்பட்டதாக இருந்தால், அதை ஓப்பன் டோர் செயல்முறை, சட்டத் துறை, இணக்கத்துறை அல்லது Magna Hotline வழியாக ஒரு மேலாளரிடம் புகாரளிக்கவும்.

**கே** இணையத்தில் வெளியிடப்பட்ட ஒரு செய்தித்தாள் கட்டுரையில், நமது சமீபத்திய நிதி முடிவுகள் குறித்த சில தவறான தகவல்களை நான் கண்டேன். அந்தச் செய்தித்தாளின் இணையத்தளத்தில் சரியான விவரத்தை குறிப்பிட்டு நான் ஒரு கருத்தை எழுத விரும்புகிறேன். நான் அப்படிச் செய்யலாமா?

**ப** இல்லை. தவறான தகவல்கள் குறித்து கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் அல்லது முதலீட்டாளர் உறவுகள் துறையில் உள்ள ஒருவருக்கு உடனடியாகத் தெரிவிக்கவும். நாம் நமது வணிகத்தைப் பற்றிப் பதிவிட்டால், நாம் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்படாத பிரதிநிதிகளாகச் செயல்படுகிறோம் என்று அர்த்தம்.

# நமது வணிகம்

## ரகசியத் தகவல்களின் பயன்பாடு

நாம் Magna-இன் ரகசியத் தகவல்களையும் நமது வணிகக் கூட்டாளர்களின் தகவல்களையும் பாதுகாக்க வேண்டும்.

மற்ற உடமைகளைப் போலவே இரகசிய விவரங்களும் நம்முடைய தொழிலின் மதிப்பு மிக்க பகுதிகள் ஆகும், அவற்றைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும், உதாரணமாக நமது நிறுவனம், நமது வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்கள் தொடர்பான தொழில் இரகசியங்கள், தனியுரிமை விவரங்கள் மற்றும் அறிவுசார் உடைமைகள். இரகசியத் தகவலை, சட்டப்படி அல்லது அங்கீகரிக்கப்பட்ட வணிக நோக்கத்திற்காகத் தேவைப்பட்டால் ஒழிய, Magna -க்கு வெளியே உள்ள எவருடனும் பகிரக்கூடாது மற்றும் "தெரிந்து கொள்ள வேண்டும்" என்ற அடிப்படையில் மட்டுமே உள்நாட்டில் பகிரப்பட வேண்டும். Magna நிறுவனத்தின் ரகசியத் தகவல்களைப் பாதுகாக்கும் நமது பொறுப்பானது, நிறுவனத்துடனான நமது வேலைவாய்ப்பின்போதும், வேலைவாய்ப்பு முடிவடைந்த பிறகும் அல்லது பிற உறவு முடிவடைந்த பிறகும் பொருந்தும்.

மேலதிக வழிகாட்டுதலுக்கு, நமது **ரகசியத் தகவல்கள் கொள்கையைப்** பார்க்கவும்.

### கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** ஒரு புதிய திட்டம் குறித்த தகவல்களைக் கொண்ட ஒரு மின்னஞ்சலை ஒரு வாடிக்கையாளரிடமிருந்து நான் பெற்றேன். இந்தத் தகவல்களை அதே வாடிக்கையாளரின் நிறுவனத்தில் உள்ள வேறு ஒரு பணியாளருடன் நான் பகிரலாமா?

**ப** இல்லை. ரகசியத் தகவல்களைத் “தேவைப்படுபவர்களுக்கு” மட்டுமே பகிர வேண்டும். அந்த இரகசியத் தகவல்கள் வாடிக்கையாளரின் நிறுவனத்திலிருந்து வந்ததால் மட்டும், உங்கள் வாடிக்கையாளர் தொடர்புக்கு அந்தத் தகவல்களைப் பற்றித் தெரிந்திருக்கும் என்று ஒருபோதும் கருத வேண்டாம்.

**கே** நமது ரகசியத் தகவல்களைப் பாதுகாக்க நான் என்ன செய்ய முடியும்?

**ப** ரகசியத் தகவல்களைப் பாதுகாக்க நாம் எடுக்கக்கூடிய பல நடவடிக்கைகள் உள்ளன. ரகசியப் பதிவுகளையும் தகவல்களையும் நாம் மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும், நமது மின்னணு சாதனங்களைக் கவனிக்கப்படாத நிலையில் விட்டுவிடக் கூடாது, குறிப்பாகப் பயணம் செய்யும்போதும் அல்லது வணிக நிகழ்வுகளின்போதும் இவ்வாறு செய்யக்கூடாது. நெரிசலான மின்தூக்கி அல்லது விமானம் போன்ற பொது இடங்களில் Magna நிறுவனத்தின் வணிகம் குறித்து விவாதிப்பதையும் நாம் தவிர்க்க வேண்டும். MagNET-இல் கிடைக்கும் நமது தகவல்கள் மேலாண்மைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.





# முறையற்ற பங்கு வர்த்தகம்

நாம் வர்த்தகக் கட்டுப்பாடுகளை மதிக்கிறோம், இன்சைடு தகவல்களைப் பயன்படுத்தி வர்த்தகம் செய்வதில்லை.

Magna-இல் நாம் செய்யும் பணி மூலம், Magna மற்றும் நாம் வணிகம் செய்யும் பிற நிறுவனங்களைப் பற்றிய, பொதுமக்களுக்குத் தெரியாத, பகிரங்கமற்ற, இரகசியத் தகவல்களை நாம் அணுகக்கூடும். இந்த இன்சைடு தகவல்களை முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது, அதாவது Magna நிறுவனப் பங்குகளை வாங்குவது அல்லது விற்பது அல்லது இன்சைடு தகவல்களின் அடிப்படையில் பிற நிறுவனங்களின் பங்குகளை வாங்குவது அல்லது விற்பது போன்ற செயல்கள் சட்டவிரோதமாகும். Magna அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறுவனம் குறித்த இன்சைடு தகவல்கள் நம்மிடம் இருந்தால், அந்தத் தகவல்கள் பொதுமக்களுக்குத் தெரியவரும் வரை, அந்த நிறுவனத்தில் முதலீடு செய்வதற்கு நமக்குத் தடை விதிக்கப்படுகிறது. இன்சைடு தகவல்களைச் சக பணியாளர்கள் அல்லது Magna-க்கு வெளியே உள்ளவர்களுடன் (உறவினர்கள் மற்றும் நண்பர்கள் உட்பட) விவாதிக்கவோ அல்லது பகிரவோ வேண்டாம் அல்லது நீங்கள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளாவிட்டாலும், வேறு யாரையும் இன்சைடு தகவல்கள் மூலம் வர்த்தகம் செய்ய பரிந்துரைக்க வேண்டாம்.

இன்சைடர் டிரேடிங் மற்றும் முறையற்ற தகவல்களை வெளியிடுவதைத் தவிர்ப்பது எப்படி என்பது குறித்த மேலதிக வழிகாட்டுதலுக்கு, நமது **இன்சைடர் டிரேடிங் மற்றும் பிளாக் அவுட் கொள்கையைப்** பார்க்கவும்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** அக அறிக்கைகளின் அடிப்படையில், நமது விற்பனை கணிசமாக அதிகரித்துள்ளது என்பதையும், இந்தக் காலாண்டில் நமது லாபம் தொழில்துறை ஆய்வாளர்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும் என்பதையும் நான் அறிவேன். நமது காலாண்டு வருவாய் முடிவுகளை நாம் பொதுவில் அறிவிப்பதற்கு முன்பு, எனது சகோதரியிடம் Magna பங்குகளை வாங்குமாறு நான் கூறலாமா?

**ப** இல்லை. நமக்கோ அல்லது நமது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் உட்பட மற்றவர்களுக்கோ நன்மை பயக்கும் வகையில் இன்சைடு தகவல்களைப் பயன்படுத்துவது நமது கோட்பாடுகளுக்கு முரணானது மற்றும் சட்டவிரோதமானது ஆகும்.

# முதலீடுகள் மற்றும் கார்ப்பரேட் வாய்ப்புகள்

நாம் Magna-இன் சிறந்த நலன்களுக்கு உகந்த வகையில் செயல்பட வேண்டும், நமது தனிப்பட்ட நலன்கள் Magna-இன் நலன்களுடன் முரண்படும் சூழ்நிலைகளையோ அல்லது அத்தகைய தோற்றத்தை ஏற்படுத்தும் சூழ்நிலைகளையோ தவிர்க்க வேண்டும்.

உதாரணமாக, நமது பணியின் காரணமாக அல்லது Magna -இன் சொத்து அல்லது தகவலைப் பயன்படுத்துவதன் மூலம் வணிக வாய்ப்புகளைக் கண்டறிந்தால், இந்த வாய்ப்புகளை நாம் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தக் கூடாது. நாம் Magna-இன் ஆதாரங்களைத் தனிப்பட்ட ஆதாயத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது அல்லது Magna உடன் போட்டி போடும் எந்தவொரு செயலிலும் ஈடுபடக்கூடாது.



## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** நான் பொறியியல் துறையில் பணிபுரிகிறேன், எனது பணியின்போது, ஒரு புதிய டிரான்ஸ்மிஷன் டிசைனை நான் உருவாக்கியுள்ளேன், இது நமது வாகனத் துறை வாடிக்கையாளர்களில் சிலருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் இந்த டிசைனை உருவாக்கியதால் நான் அதனை அவர்களிடம் நேரடியாகச் சந்தைப்படுத்தலாமா?

**ப** கூடாது, நீங்கள் அவ்வாறு செய்வது நமது கோட்பாட்டை மீறியதாகும். நமது பணிகளின் ஒரு பகுதியாக நாம் உருவாக்கும் எந்த அறிவுசார் சொத்தும் Magna -க்குச் சொந்தமானது. கூடுதலாக, Magna-இல் நமது வேலையின்போது நிறுவனத்தின் ஆதாரங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் எந்தவொரு டிசைனும், Magna-க்கு ஒரு மதிப்புமிக்க தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும். நாம் Magna-இன் அனுமதி பெறாமல் அதைத் தனிப்பட்ட முறையில் நமக்குப் பலன் அளிக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

# சுயமாகக் கையாளுதல் மற்றும் உறவினர்கள் அல்லது நண்பர்களுடன் பழகுதல்

நமது தனிப்பட்ட ஆர்வங்களும் உறவுகளும் நம்முடைய பணிசார்ந்தப் பொறுப்புகளுடன் குறுக்கிடக் கூடாது. உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களை மேற்பார்வையிடுவது, அவர்களின் கீழ் பணியாற்றுவது அல்லது அவர்களின் ஊதிய மதிப்பீட்டில் செல்வாக்குச் செலுத்துவது ஆகியவை பொருத்தமற்றவை ஆகும். அதேபோல், உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள் அல்லது அவர்களுக்கோ நமக்கோ கணிசமான பங்குள்ள நிறுவனங்களைப் பணியமர்த்தவோ, மதிப்பீடு செய்யவோ, நிதியளிக்கவோ அல்லது வணிக உறவுகளில் ஈடுபடவோ கூடாது.

நமது பணி தொடர்பான முடிவுகள் நமது தனிப்பட்ட உறவுகளாலோ அல்லது நலன்களாலோ பாதிக்கப்படக்கூடும் என்றாலோ அல்லது அவ்வாறு தோன்றும் பட்சத்திலோ, நாம் இந்தச் சூழ்நிலைகளை **ஆதாய முரண்பாடுகள் குறித்த கொள்கையின்** கீழ் வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய பரிவர்த்தனைகள் மற்றும் முடிவுகள் அனைத்தும் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நாம் இணங்க வேண்டும்.

## கேள்விகள் மற்றும் பதில்கள்

**கே** நான் கொள்முதல் துறையில் ஒரு வாங்குபவராக இருக்கிறேன். நம்முடைய வழங்குநர் நிறுவனங்களின் ஒன்றில் விற்பனை பிரிவின் தலைவராக என்னுடைய மனைவி சமீபத்தில் வேலைக்கு சேர்ந்துள்ளார். இது ஆதாய முரண்பாடாகுமா?

**ப** ஆம். உங்கள் மனைவியின் புதிய பதவி உங்களுடைய தொழில் தீர்மானங்களைப் பாதிக்கக்கூடும் அல்லது மற்றவர்களுக்கு அந்த உணர்வைத் தரக்கூடும். **ஆதாய முரண்பாடுகள் குறித்த கொள்கையின்** அடிப்படையில் இந்த முரண்பாட்டை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். அந்த வகையில், நிர்வாகம் நிலைமையை மதிப்பிட்டு, முரண்பாட்டைக் கையாள்வதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முடியும். இவ்வாறு செய்வது Magna நிறுவனத்திற்கு உதவுகிறது, அத்துடன் முறையற்ற நடத்தை குறித்த எந்தவொரு குற்றச்சாட்டிலிருந்தும் உங்களையும் உங்கள் மனைவியையும் பாதுகாக்கிறது.

# வெளிப் பதவிகள்

மேக்னா வெற்றியடைய உதவுவதற்கு நாம் பணி நேரங்களின்போது நமது முழு நேரத்தையும் முழு கவனத்தையும் நம்முடைய பணிகளுக்கு தரவேண்டும். எனவே, Magna -வில் நமது வேலைகளுக்கு நாம் செலவிடக்கூடிய நேரத்தையும் கவனத்தையும் குறைக்கும் வெளிப்புறக் கடமைகளை நாங்கள் ஏற்காமல் இருக்கலாம்.

சூழ்நிலை வெளிப்படுத்தப்பட்டு **ஆதாய முரண்பாடுகள் குறித்த கொள்கையின்படி** அங்கீகரிக்கப்பட்டிருந்தால் தவிர Magna உடன் ஆதாய முரண்பாட்டை உருவாக்கக்கூடிய அல்லது உருவாக்குவது போல் தோன்றும் எந்தவொரு ஊதியம் அளிக்கப்படும் அல்லது ஊதியம் அளிக்கப்படாத பதவியையும் ஏற்றுக்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.



# கூடுதல் ஆதாரங்கள்

ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது நமது நன்னடத்தை மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகள் பற்றி மேலும் தகவல் தேவைப்பட்டால், நாம் சட்டத் துறை அல்லது Magna -இன் நெறிமுறைகள் மற்றும் சட்டத் இணக்கத் துறை உறுப்பினரைத் தொடர்பு கொள்ளலாம். இணக்கக் குழு உறுப்பினர்களின் பட்டியலை **magna.com** வலைத்தளம் அல்லது MagNET-இல் உள்ள **நெறிமுறைகள் மற்றும் சட்ட இணக்கப்** பக்கத்தில் காணலாம்.



# சொற்களஞ்சியம்

**மதிப்புமிக்க எதுவும்**: இது, மற்ற பலவற்றுடன் சேர்த்து, ரொக்கப் பணம் (அல்லது பரிசு அட்டைகள் போன்ற ரொக்கத்திற்கு இணையானவை), பரிசுகள், தொண்டு நிறுவனங்களுக்கான நன்கொடைகள், உணவு, பயணச் செலவுகள், நிகழ்வு டிக்கெட்கள் அல்லது பிற பொழுதுபோக்கு, கல்விச் செலவுகள், தள்ளுபடிகள், உதவிகள், எதிர்கால வேலைவாய்ப்புக்கான வாக்குறுதிகள் அல்லது ஒரு நிறுவனத்தின் பங்குகள் போன்ற வடிவங்களில் இருக்கலாம்.

**லஞ்சம்**: ஒரு வகையான முறையற்ற பேமெண்ட். Magna நிறுவனத்திற்குப் பயனளிக்கும் அல்லது சாதகமான நிலையை ஏற்படுத்தும் வகையில், ஒருவரின் நிறுவனம் சார்பாக மேற்கொள்ளப்படும் ஒரு செயல் அல்லது எடுக்கப்படும் முடிவைச் செல்வாக்குச் செலுத்தி மாற்றுவதற்கான முயற்சியாகக் கருதப்படக்கூடிய, ஒரு நபரின் தனிப்பட்ட நலனுக்காக அவருக்கு வழங்கப்படக்கூடிய அல்லது அளிக்கப்படும் மதிப்புமிக்க எந்தவொரு பொருளும் லஞ்சம் எனப்படும்.

**இணக்கம்**: சட்டம், இந்தக் கோட்பாடுகள் மற்றும் நமது கொள்கைகள் அனைத்தையும் அதன் சொல் மற்றும் செயலின்படி பின்பற்றுகிறது.

**அக்கறை சார்ந்த முரண்பாடு**: பொதுவாக, ஆதாய முரண்பாடு என்பது, உங்கள் தனிப்பட்ட நலன்கள் (அல்லது உங்களுடன் தொடர்புடைய அல்லது தனிப்பட்ட உறவு கொண்ட ஒருவரின் நலன்கள்) Magna-இன் நலன்களிலிருந்து வேறுபடும்போது, Magna-க்காக ஒரு வணிக முடிவை எடுக்கும் அல்லது அதைத் தீர்மானிக்கும் நிலையில் நீங்கள் இருக்கும் ஒரு சூழ்நிலையைக் குறிக்கிறது.

**எளிதாக்குவதற்கான (அல்லது "கைக்கூலி") பேமெண்ட்கள்**: ஒரு வகையான லஞ்சம், பொதுவாக Magna சட்டப்பூர்வமாக உரிமை பெற வழக்கமான அரசுச் சேவைகள் அல்லது நடவடிக்கைகளை விரைவுபடுத்த அல்லது பெறுவதற்காகக் கீழ் மட்ட அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அதிகாரப்பூர்வமற்ற பேமெண்ட்.

**நல்லெண்ணம்**: நேர்மையான மற்றும் உளப்பூர்வமான நோக்கத்துடன்.

**அரசு அதிகாரிகள்**: இதில் அடங்குபவர்கள்: (i) ஓர் அரசாங்கம், துறை அல்லது முகமையின் அதிகாரி அல்லது ஊழியர், ஏதேனும் ஒரு பொது சர்வதேச முகமை அல்லது அரசாங்கம், துறை அல்லது பொது சர்வதேச முகமையின் சார்பாக எந்தவொரு அதிகாரப்பூர்வத் தகுதியிலும் செயல்படும் எந்தவொரு நபரும், அத்துடன் நமது நடைமுறைகளின்படி அரசு அதிகாரி எனக் கருதப்படும் வேறு எந்த நபரும்; (ii) (i)-இல் குறிப்பிடப்பட்ட அதிகாரி அல்லது ஊழியராக ஆவதற்கான ஒரு வேட்பாளர்; (i)-இல் குறிப்பிடப்பட்ட அதிகாரி அல்லது ஊழியரின் தேர்வு, பரிந்துரை, நியமனம் அல்லது தேர்தலைப் பாதிக்கும் வகையில் செயல்படும் ஓர் அமைப்பு (அரசியல் கட்சி அல்லது அரசியல் நடவடிக்கைக் குழு போன்றவை).

**இன்சைடு தகவல்கள்**: முதலீட்டாளர்கள் அல்லது பொதுமக்களுக்குத் தெரியாத ஒரு விவரம், இந்த விவரம் தெரியவந்தால் ஒரு நிறுவனம் அல்லது அதன் பங்கு அல்லது பத்திரத்தின் மதிப்பைபற்றிய அவர்களுடைய பார்வை குறிப்பிடத்தக்க அளவில் மாறக்கூடும். உதாரணமாக, ஒரு குறிப்பிடத்தக்க கையகப்படுத்துதல் அல்லது இணைப்பு, மூத்த மேலாளர்கள் குழுவில் மாற்றங்கள், குறிப்பிடத்தக்க வழக்கு அல்லது தொழிலாளர் பிரச்சனைகள்.

**கையூட்டு**: ஒரு வணிக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது வளர்ப்பதற்காகவோ, ஏற்கனவே செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய ஒரு தொகையை தனிப்பட்ட வெகுமதியாகத் திருப்பிப் பெறும் ஒரு வகையான லஞ்சம்.

**லாபி செய்தல்**: அரசாங்கத்தின் எந்த ஒரு நிலையிலும் உள்ள அரசாங்க அலுவலர்களுடைய (பொது அலுவலகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், அரசாங்க அமைப்புகளின் ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் உள்பட) தீர்மானம் எடுத்தலை ஊக்குவித்தல், எதிர்த்தல் அல்லது மற்ற வகைகளில் பாதிக்கிற நோக்கத்துடன் அவர்களுடன் தொடர்பு கொள்ளுதல்.

**தனிப்பட்ட தரவு**: அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய ஒரு தனிநபரைப் பற்றிய தகவல்கள். ஒரு தனிநபர் பின்வரும் காரணிகளைக் கொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அடையாளம் காணப்பட்டால், அவரை அடையாளம் காணலாம்: (i) அவரது பெயர், ID எண் அல்லது இருப்பிடத் தரவு போன்ற ஒரு அடையாளங்காட்டி அல்லது (ii) அவரைப் பற்றிய உடல்ரீதியான, சமூக அல்லது நிதி விவரங்களைத் தெரிவிக்கும் காரணிகள்.

**தனிப்பட்ட தரவைச் செயலாக்குதல்**: தனிப்பட்ட தரவைச் சேகரித்தல், பதிவுசெய்தல், ஒழுங்கமைத்தல், கட்டமைத்தல், சேமித்தல், மாற்றுதல், பயன்படுத்துதல், வெளிப்படுத்துதல், அழித்தல் அல்லது இல்லாமல் செய்தல் உட்பட, தனிப்பட்ட தரவுடன் செய்யப்படும் எந்தவொரு செயல்பாடும்(களும்).

**உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்கள்**: வாழ்க்கைத்துணை, உடன் வசிப்பவர், குழந்தை, பெற்றோர், தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி, உடன் பிறந்தோர், அத்தை, மாமா, சித்தி, சித்தப்பா, பெரியம்மா, பெரியப்பா, மருமகன், மருமகள், மாமனார், மாமியார், வாழ்க்கைத்துணையின் உடன்பிறந்தோர், ஒன்றுவிட்ட/ தத்தெடுத்த/ வளர்த்த உறவுகள், உங்கள் வீட்டில் வசிக்கிற, உங்களுடன் குடும்ப உறவுகொண்ட நபர்கள் மற்றும் வேலைக்கு வெளியே நீங்கள் பழகுகிற நண்பர்கள் இதில் அடங்குவார்கள்.

**கணிசமான பங்கு**: பின்வரும் சூழ்நிலைகளில் ஒருவர் ஒரு வணிகத்தில் கணிசமான பங்குகளைக் கொண்டிருப்பவராகக் கருதப்படுவார்: (i) அந்த வணிகத்தின் பங்குகள், சொத்துகள் அல்லது பிற நலன்களில் பத்து சதவீதம் (10%) அல்லது அதற்கு மேற்பட்டவற்றை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கட்டுப்படுத்தினால்; (ii) தனது நிகர சொத்து மதிப்பில் பத்து சதவீதம் (10%) அல்லது அதற்கு மேற்பட்டதை அந்த வணிகத்தில் முதலீடு செய்திருந்தால்; (iii) அந்த வணிகத்தில் ஒரு தலைமைப் பதவியைக் கொண்டிருந்தால்; அல்லது (iv) Magna உடனான வணிக உறவின் மூலம் அந்த வணிகத்திலிருந்து நேரடியாகப் பயனடைந்தால்.

**மூன்றாம் தரப்பு**: Magna-க்கு வெளியே இயங்கும் ஒரு நபர், நிறுவனம் அல்லது வணிகம்.

**முதலில் இயற்றப்பட்டது**: மே 1, 2016
**நடப்புப் பதிப்பு**: ஜனவரி 1, 2026
**அடுத்த மதிப்பாய்வு**: கா1 2029
**வெளியீடு செய்தவர்**: நெறிமுறைகள் & சட்ட இணக்கம்
**ஒப்புதல் அளித்தவர்**: இயக்குநர் குழு

Forward. For all.



Magna International Inc.
337 Magna Drive
Aurora, Ontario
Canada L4G 7K1
தொலைபேசி எண்: 905 726 2462

**MAGNA உடன் இணையுங்கள்**

**magna.com**